## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1] 2019 கோல்ஹாப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில் 2019க்கான காலமஹரிசி பாபுராவ் ஓவியர் விருது வாங்கியவர் யார்?

[A] கஜேந்திர அஹைர்

[B] அபுஜித் டேஷ்பாண்டே

[C] கோவிந்த் நிஹலானி

[D] ரோகினி ஹட்டாரிங்

- ✓ புகழ்பெற்ற ஒளிப்பதிவாளர், கதாசிரியர், தயாரிப்பாளர் கோவிந்த் நிஹலானிக்கு 2019 கோல்ஹப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில் 2019க்கான காலமஹரிசி பாபுராவ் ஓவியர் விருது வழங்கப்பட உள்ளது. 7வது திரைப்பட விழா பிப் 7-14ல் நடைபெற உள்ளது.
- ✓ இந்த விருது பாபுராவ் என்பவரின் பெயரில் வழங்கப்படுகிறது. இவர் கோல்ஹப்பூரை சேர்ந்தவர். சினிமாதுறையில் ஓவியராகவும், இயக்குநராகவும் இருந்தவர்.
- ✓ இந்த திரைப்பட விழாவில் ஜப்பான், சவுத் கொரியா, பிரான்ஸ், இரான் போன்ற நாடுகளிலிருந்து 50க்கும் மேற்பட்ட படங்கள், குறும்படங்கள் திரையிடப்பட உள்ளன.
- ✓ இவ்விழாவில் ஹங்கேரியா கவன நாடாக இருக்கும்.

2] ரமேஷ் பக்தர், சமீபத்தில் இறந்தார். இவர் எந்த மொழி துறையில் நடிகராக சிறந்து விளங்கியவர்?

[A] மராத்தி

[B] தமிழ்

[C] தெலுங்கு

[D] ஒடியா

- ✓ ரமேஷ் பக்தர் (70), அனுபவம் மிகுந்த மராத்திய நடிகர் பிப்ரவரி 4 ,2019 இல் மும்பையில் காலமானார்.
- ✓ 'கமாண்டர்' மற்றும் 'ஹலோ இன்ஸ்பெக்டர்' போன்ற தொலைக்காட்சி நாடகங்கள் மூலம் புகழ் பெற்றவர்.



winmeen.com

- ✓ Aai Pahije, Kucch to hai மற்றும் Bhavesh Joshi Superhero 1 ஹிந்தி, மராத்திய படங்களில் நடித்துள்ளார். 30 வருடங்கள் சினிமா துறையில் அனுபவம் பெற்றவர்.
- ✓ Ooghadele Swagache Dear(1982), Denaryaache Haath Hazaar(1980), Shadyantra (1991), Kevha Tari Pahate, Akher Tir Yeshilach, Rahu Ketu, Muka, The Boss-Sutradhar, Kinara போன்ற திரைப்படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளார்.

3] ICT அகாடமி ப்ரிட்ஜ் 2019 மாநாடு எங்கு நடைபெற்றது?

[A] ஜெய்ப்பூர்

[B] நியு டெல்லி

[C] புனே

[D] சென்னை

- ✓ 37வது ICT அகாடமி பிரிட்ஜ் 2019 மாநாடு சென்னையில் நடைபெற்றது. இதன் கருப்பொருள் "Fostering India for Industry 4.O" ஆகும்.
- ✓ துறை சார்ந்த நிபுணர்கள், கல்லூரிகளின் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்டு இந்தியா நான்காம் Industrial revolution இல் சந்திக்கும் சவால்களை ஆலோசித்தனர்.
- ✓ தொழில்துறை-கல்வித்துறை கலந்துகொண்ட ஆசியாவின் மிகப்பெரிய மாநாடு இதுவாகும். இதனை ஐசிடி அகாடமி நடத்தியது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

4] 2019 சியாட்டில் ஓபன் பட்டத்தை வென்ற இந்திய ஸ்குவாஷ் வீரர் யார்?

[A] சவுரல் கோஷல்

[B] ராமித் டன்டன்

[C] ஹரிந்தர் பால் சந்து

[D] சைரஸ் போன்ச்சா

- ✓ இந்திய ஸ்குவாஷ் வீரர் ராமித் டன்டன் அமெரிக்காவில் மொஹமத் அல் செர்பினி(எகிப்து)-யை தோற்கடித்து 2019 சியாட்டில் ஓபன் பட்டத்தை வென்றார்.

✓ இது அவருடைய நான்காவது பட்டமாகும். சியாட்டில் ஓபன் Professional Squash Association (PSA) ஆல் நடத்தப்படுகிறது.

5] விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக KALIA மாணவர் உதவித்தொகை திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

[A] சத்தீஸ்கர்

[B] தமிழ்நாடு

[C] அசாம்

[D] ஒடிசா

✓ ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் கியோன்ஜார் மாவட்டத்தில் 'KALIA Chhatravritti Yojana' திட்டத்தை துவங்கி வைத்தார்.
✓ KALIA- Krushak Assistance for Livelihood and Income Augmentation.
✓ தொழில் கல்லூரிகளில் படிக்கும் விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர்.
✓ இதன் மூலம் பயன்பெறும் மாணவர்களின் உயர் கல்விக்கான செலவை அரசாங்கம் கல்வி உதவித்தொகையாக அளிக்கும்.
✓ தூய குடிநீருக்காக 1050 கோடி மதிப்புள்ள குடிநீர் திட்டங்களை அம்மாவட்டத்தில் முதலமைச்சர் நவீன் பட்நாயக் துவங்கி வைத்தார். 45 கோடி மதிப்பிலான முன்னேற்ற திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

6] Price Monitoring and Research Unit (PMRU) துவங்கிய முதல் இந்திய மாநிலம் எது?

[A] பஞ்சாப்

[B] கேரளா

[C] கர்நாடகா

[D] தெலுங்கானா

winmeen.com

- ✓ அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களின் விலையை நிர்ணயிப்பதில் நடக்கும் அத்துமீறல்களை கண்காணிக்க நாட்டிலேயே முதல் மாநிலமாக கேரளா Drugs Price Control Order(DPCO) வின் கீழ் Price Monitoring and Reasearch Unit(PMRU) துவங்கியுள்ளது.
- ✓ 5 வருடங்களுக்கு முன் National Pharmaceutical pricing authority(NPPA) அளித்த அறிக்கையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.
- ✓ விலை ஏற்ற இறக்கங்களை கண்காணித்தல், DPCO விதிமுறை மீறல்களை கண்காணித்தல், மாதிரி மருந்து சோதனை நடத்துதல் போன்றவை PMRU வின் வேலைகள் ஆகும்.

7] எல் சல்வேடார் நாட்டின் குடியரசுத் தலைவர் தேர்தலில் வென்றவர் யார்?

[A] நயிப் புக்கலே

[B] ஜோஷி அல்வராடோ

[C] ஹுகோ மார்டின்ஸ்

[D] கார்லஸ் கல்லேஜா

- ✓ Grand Alliance for National Unity(GANU)-ன் நயிப் புக்கலே எல்-சல்வேடார் நாட்டின் குடியரசுத் தலைவர் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை கண்டார். அவர் 53 சதவீதத்திற்கும் மேலான வாக்குகளை பெற்றிருந்தார்.
- ✓ இதன் மூலம் கடந்த 30 ஆண்டுகளாக நடந்து வந்த இருகட்சி ஆட்சிமுறை முடிவுக்கு வந்தது. சல்வேடார் சான்செஸ் செரனை தொடர்ந்து ஆட்சியில் அமர்கிறார். ஜீன் 1, 2019 இல் பதவி ஏற்க உள்ளார்.

8] பிரபஞ்சத்தின் சுற்றுபுறத்தில் 'Bedin 1' என பெயரிடப்பட்டுள்ள சிறிய அண்டத்தை கண்டறிந்த விண்வெளி தொலைநோக்கியின் பெயர் என்ன?

[A] Astro2

[B] Astrosat

[C] Hisaki

[D] Hubble

Winmeen.com

- ✓ Hubble Space Telescope(HST) சமீபத்தில் எதிர்பாராமல் சிறிய அண்டம் ஒன்றை பிரபஞ்சத்தின் சுற்றுப்புறத்தில் கண்டுபிடித்தது. இதற்கு 'Bedin-1' என பெயர் வைக்கப்பட்டுள்ளது. புவியிலிருந்து 30 மில்லியன் ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ளது. நம்பத்தகுந்த பெரிய பிரபஞ்சமான 'NGC6744' ல் இருந்து 2 மில்லியன் ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளது.
- ✓ சிறிய உருளை வடிவில் காட்சியளிக்கிறது. ஏனெனில் இதன் அதிக பட்ச நிலமதிப்பீடு 3 ஆயிரம் ஒளி ஆண்டுகள் என கணக்கிடப்பட்டுள்ளது. பால்வழி அண்டத்தை விட ஆயிரம் மடங்கு மங்கலாக காணப்படுகிறது.
- ✓ இதனை கண்டுபிடித்த குழுவின் தலைவர் டாக்டர் L.R.Bedin பெயர் இடப்பட்டுள்ளது. சிறிய உருளை வடிவ அண்டங்கள் தனிச்சிறப்புகள் கொண்டவை அல்ல, ஆனால் 'Bedin-1'ல் சில தனிச் சிறப்புகள் உள்ளன. Bedin-1,ஒரு சிறிய உருளை வடிவ அண்டம், வெகு தொலைவில் மட்டும் இல்லாமல் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- ✓ இதுவரை கண்டுபிடித்த அண்டங்களிலேயே வெகு தொலைவில் உள்ள அண்டம் இதுவாகும். சிறிய உருவம், குறைந்த ஒளிதிறன், குறைந்த அளவிலான தூசுகள், குறைந்த பிரஜைகள் போன்றவை மூலம் சிறிய உருளை வடிவ அண்டங்களை வரையறுக்கலாம். இதுவரை 36 அண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதில் 22 அண்டங்கள் பால்வழி அண்டத்தின் துணைக்கோள்கள் ஆகும்.
- ✓ ஆய்வாளர்கள் NASA/ESA Hubble Space Telescope ஐ 'NGC6744'ன் சுற்றுவட்டாரத்தில் உள்ள சிறிய நட்சத்திரங்களை ஆராய்ந்தனர். அந்த ஆய்வின் நோக்கம் 'NGC6744'ன் வயதை கண்டுபிடிப்பதாகும். ஆனால் எதிர்பாராத விதமாக 'Bedin-1' கண்டுபிடிக்கப்பட்டது.

9] சமீபத்தில் செய்திகளில் கண்ட INF ஒப்பந்தம் எந்தெந்த நாடுகளுக்கு இடையில் போடப்பட்டது?

[A] தாய்வான் மற்றும் சைனா

[B] பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி

[C] அமெரிக்கா மற்றும் ரஷ்யா

[D] இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம்

- ✓ The Intermediate-range Nuclear Forces(INF) ஒப்பந்தம் என்பது 1987இல் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே போடப்போட்ட ஏவுகணை ஒப்பந்தமாகும். ரொனால்ட் ரேகன், மிக்கைல் கோர்பச்சேவ் இருவரும் போட்ட ஒப்பந்தம் மூலம் இரு நாடுகளும் 500 முதல் 5500 கிமீ அளவில் பாயும்

winmeen.com

ஏவுகணைகளை பயன்படுத்துவதிலிருந்து தடை செய்யப்பட்டது. இதன் மூலம் இரு நாடுகளுக்கிடையேயான ஆயுதப் போட்டி நிறுத்தப்பட்டது.

- ✓ ஒப்பந்தத்தில் சோவியத் ரஷ்யா மேற்கத்திய நாடுகளின் மீது தொடுக்கும் அணு ஆயுதங்களில் சில கட்டுப்பாடுகள் இருந்தது.ஆனால் சீனா போன்ற நாடுகளுக்கு அந்த கட்டுப்பாடுகள் இல்லை. சமீபத்தில் பிப் 2,2019 அன்று அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தை நிறுத்தி கொள்வதாகவும், இன்னும் ஆறு மாதங்களில் ஒப்பந்தத்தை திரும்ப பெறுவதாக அறிவித்தது.
- ✓ ஒப்பந்தத்தின் நிபந்தனை XVல் திரும்ப பெறுவதற்கு முன் ஆறு மாதம் நோட்டீஸ் காலம் கட்டாயமாகும். திரும்ப பெறுவதற்கான காரணங்கள்: ட்ரம்ப் ஒபாமா ஆட்சி காலங்களில் ரஷ்யா இந்த ஒப்பந்தத்தை மீறுவதாக குற்றம் சாட்டப்பட்டது. யூரோப்பை சற்று நேரத்தில் அழிக்கும் ஆற்றல் வாய்ந்த ஏவுகணை 'Novator 9M729'(SSC-8)ஐ ரஷ்யா பயன்படுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் ரஷ்யா இதை மறுத்தது.
- ✓ ரஷ்யாவோ அமெரிக்கா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை யூரோப்பில் சோதிப்பதாக எதிர் குற்றச்சாட்டு வைத்தது.

10] அரியம் சியாம் ஸர்மா, குடியுரிமை திருத்த மசோதா, 2016 க்கு எதிரான போராட்டத்தில் பத்மஸ்ரீ விருதை திருப்பி தந்தவர். இவர் எந்த மாநிலத்தை சேர்ந்தவர்?

[A] மணிப்பூர்

[B] மிசோரம்

[C] நாகலாந்து

[D] திரிபுரா

- ✓ மணிப்பூரை சேர்ந்த இசையமைப்பாளர் மற்றும் இயக்குனர் அரியம் சியாம் சர்மா தனது 2006 பத்மஸ்ரீ விருதை குடியுரிமை திருத்த மசோதா, 2016 க்கு எதிரான போராட்டத்தில் திருப்பி வழங்கினார்.
- ✓ 85 வயது நிறைந்த சர்மா, 1979 - 85 உயிரிழந்த 855 தியாகிகளின் குடும்பத்தினர் 2016ல் தங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை திருப்பி தந்த பிறகு இந்த முடிவெடுத்தார்.
- ✓ இந்த மசோதா அண்டை நாட்டில் இருந்து டிச 31, 2014 - வரை இந்தியாவில் பெயர்ந்த முஸ்லிம் அல்லாத மக்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.

winmeen.com